


02.09. 2026 – 13.45 PM

தலைப்புச் செய்திகள்

- ஜல்சக்தி அமைச்சகத்தின் துறை சார் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்றுமாலை உரையாற்றுகிறார்.
- தமிழ்நாட்டில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பான குடிநீர் விநியோக திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.
- தமிழக அரசு மருத்துவமனைகளில் காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தினசரி உதவித்தொகை 600 ரூபாயாக உயர்த்தப்படும் என்று மீன்வளத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் மானியக் கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.
- செட்டிநாடு, நடுவூர், சின்னசேலம் அரசுப் பண்ணைகளில் முயல் வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திருமதி.கமலி கூறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

.................

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஜல்சக்தி அமைச்சகத்தின் துறை சார் உச்சிமாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் இன்று மாலை உரையாற்றுகிறார்.

மழை நீர் சேகரிப்பில் மக்கள் பங்கேற்பு, ஜல்ஜீவன் இயக்கத்தின் இரண்டாம் கட்ட முன்னெடுப்புகள் உள்ளிட்டவை குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

இதனிடையே 3 நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வரும் பெல்ஜியம் பிரதமர் பார்ட் டி வெவர் உடன் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

……………..

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பான, தடையற்ற குடிநீர் வினியோகத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் அவை விதி 110ன் கீழ், நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அறிக்கையை இன்று தாக்கல் செய்து பேசிய அவர், மீஞ்சூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரை குடிநீராக்கும் ஆலை அமைக்கப்படும் என்றார்.

ஆவடி மாநகராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்க 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

மதுரை, கடலூர் மாநகராட்சிகள், 9 நகராட்சிகள், 20 பேரூராட்சிகளில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்படும்.

பழமையான 33 கூட்டுக்குடிநீர் திட்டங்களை சீரமைக்க முதல்கட்டமாக 300 கோடிரூபாய் ஒதுக்கப்படும்.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் குடிநீர் சுத்திகரிப்பு திறனை அதிகரிக்க 410 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

மதுரை மாநகராட்சியில் நவீன பாதாள சாக்கடை, கழிவுநீர் மேலாண்மை பணிகளுக்காக 2 ஆயிரத்து 400 கோடிரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

நாகர்கோவில் மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும், குன்றத்தூர் மற்றும் நந்திவரம் - கூடுவாஞ்சேரி நகராட்சிகளிலும் 960 கோடிரூபாய் மதிப்பீட்டில் புதிய பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

சென்னை பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்த 236 கோடிரூபாய் செலவிடப்படும்.

திருநெல்வேலி, சேலம் மாநகராட்சிகளில் 547 கோடிரூபாய் மதிப்பீட்டில் திடக்கழிவிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் கூறினார்.

சென்னை உட்பட அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

திருச்சி, திருப்பூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 130 கோடி ரூபாய் செலவில் பெரிய பூங்காக்களும், மாநிலம் முழுவதும் 175 கோடிரூபாய் செலவிலும் 250 புதிய பூங்காக்களும் அமைக்கப்படும்.

ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்றிதழ் ஆகியவற்றை இணைய வழியில் பொதுமக்கள் தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி அறிமுகம் செய்யப்படும் என்றார்.

கடந்த ஆட்சிக்காலங்களில் தங்களது கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மனித நேய அடிப்படையில் திரும்பப் பெறப்படுவதாகவும் முதலமைச்சர் அறிவித்தார்.

-----------

சட்டப்பேரவை

தமிழக அரசு மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என மாநில மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அமைச்சர் விழுப்புரத்தில் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையம் அமைய உள்ளதாக கூறினார்.

ஆம்பூர் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவ சிகிச்சை வழங்க வசதிகள் செய்யப்படும்.

பண்ருட்டி மருத்துவமனையில் பாம்புக்கடி, நாய்க்கடி போன்றவற்றிற்கு மருந்துகள் வழங்கப்படும் என்றார்.

லால்குடி, புள்ளம்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

அனைத்து மருத்துவமனைகளில் மின்னணு தகவல் பலகை அமைக்கப்பட்டு, பாம்புக்கடிக்கு எந்தெந்த மருத்துவமனைகளில்

சிகிச்சை வழங்கப்படும் என்ற விவரங்கள் அதில் இடம்பெறும் என்றார்.

நெல்லை, திருச்சி, தர்மபுரி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் புதிய செவிலியர் கல்லூரிகள் ஏற்படுத்தப்படும் என்றும் டாக்டர்.அருண்ராஜ் கூறினார்.

............ வாய்ஸ் ..........

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது வெளியான மேலும் சில தகவல்கள்

தமிழகத்தில் 6 ஆயிரம் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் 6 துணைமின் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

..........

தேனி மாவட்டம் கம்பத்தில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

போதுமான நியாயவிலைக்கடைகள் இப்பகுதியில் உள்ளதால் புதிய நியாயவிலைக்கடைகள் அவசியமில்லை என்றார்.

..........

தமிழ்நாட்டிலுள்ள சேதமடைந்த கோவில்கள் புனரமைக்கப்படும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் கூறியுள்ளார்.

விருத்தாச்சலத்தை கோவில் நகரமாக அறிவிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார்.

................

மீன்வளத்துறை

தமிழகத்தில் காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தினசரி உதவித் தொகை 600 ரூபாயாக உயர்த்தப்படும் என்று மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கையை இன்று தாக்கல் செய்து பேசிய அமைச்சர், மீன்பிடி தடை கால நிவாரண நிதி 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்றார்.

கடலில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டம் விரைவுபடுத்தப்படும் என்றார்.

கடல் வளத்தை பெருக்கும் நோக்கத்தில் கடலோர மாவட்டங்களில் செயற்கை மீன்குஞ்சுகள் உறைவிடங்கள் அமைக்கப்படும் என்பது உள்ளிட்ட 24 அறிவிப்புகளை வெளியிட்டார்.

.................

பால்வளத்துறை

விஞ்ஞான பூர்வமான கன்று வளர்ப்பு மற்றும் இன விருத்தி மேலாண்மை பணிகள் 10 கோடிரூபாய் யெலவில் மேற்கொள்ளப்படும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி.விஜயலெட்சுமி கூறியுள்ளார்.

பேரவையில் பால்வளத்துறை மானியக் கோரிக்கையை இன்று தாக்கல் செய்து பேசிய அவர், கிராமப்புறங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலின் தரத்தினை பாதுகாக்க 25 கோடியே 45 லட்ச ரூபாய் மதிப்பீட்டில், 60 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் மற்றும் 40 தொகுப்பு குளிர்விப்பு நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டப்படும் என்றார்.

தரமான பசுந்தீவன உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 25 மெட்ரிக் டன் பசுந்தீவன புல் விதைகள் 5 ஆயிரம் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் என்பது உள்ளிட்ட 16 அறிவிப்புகளை வெளியிட்டார்.

.................

கால்நடை பராமரிப்பு

செட்டிநாடு, நடுவூர் மற்றும் சின்னசேலம் ஆகிய அரசு பண்ணைகளில் முயல் வளர்ப்பு பிரிவுகளை நிறுவி புறக்கடை முயல் வளர்ப்பை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திருமதி.கமலி தமது மானிய கோரிக்கையின் போது பேரவையில் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு 70 லட்சம் ரூபாய் செலவில் பன்றி வளர்ப்பு பண்ணைகள்அமைக்கப்படும் என்றார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் 34 கோடிரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் திறன் கொண்ட நவீன ஒருங்கிணைந்த இறைச்சி பதப்படுத்தும் ஆலை அமைக்கப்படும் என்பது உள்ளிட்ட 17 அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

.................

தர்மபுரி - வாய்ஸ்

தர்மபுரியில் அதி நவீன புதிய ஆதார் சேவை மையம் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு சராசரியாக 250-க்கும் மேற்பட்டோர் பயனடையும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக இச்சேவை மையத்தின் மேலாளர் திரு.தினகரன் தெரிவிக்கிறார்.

....... வாய்ஸ் ...........

.................

நெல்லை - வாய்ஸ்

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளி, கல்லூரி மாணாக்கரின் மன நலனை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆலோசனை மையத்தை ஆட்சித்தலைவர் திரு.ஆனந்த் மோகன் இன்று திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப் பொருள் பழக்கம் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இம்மையம் செயல்படும் என்றார்.

........ வாய்ஸ் ...........

.................

செங்கல்பட்டு

விநாயகர் சதுர்த்தி வரும் 14 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத வகையிலான மூலப்பொருட்களை கொண்டு பல்வேறு வடிவங்களில் சிலைகள் தயாரிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

............வாய்ஸ் ..........

.................

கோவில்

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோவில் தசராத் திருவிழா அடுத்த மாதம் 11 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் அடுத்த மாதம் 20 ஆம் தேதி நடைபெறும் நிலையில், 41 நாட்கள் விரதத்தை பக்தர்கள் இன்று தொடங்கியுள்ளனர்.

.................

நயினார் நாகேந்திரன்

மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீர் உரிய நேரத்தில் திறந்து விடப்படாததால் 2 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள்

பயிரிடப்படாமல் பாழடைந்துள்ளதாக மாநில பிஜேபி தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எனவே, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மாநில அரசு உடனடியாக உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

தவெக அரசு தேர்தல் நேரத்தில் வழங்கிய வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

.................

இருவரி

திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் மத்திய, மாநில அரசு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் வரும் 9 ஆம் தேதி முதல் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதீக் தாயள் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆதரவற்ற மகளிரின் விவரங்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம் ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 8 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை நடைபெறும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் உதவி உபகரணங்கள் பெறுவதற்கான சிறப்பு முகாம் வரும் 8 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பத்மஜா கூறியுள்ளார்.

.................

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

.................